www.tamilarangam.net

# மரணித்தும் வாழ்பவன்



வாழ்வு
30.10.1958

முடிவு
20.01.1999

## கந்தையா புவனேஸ்வரன் (ஈஸ்வரன்)

எம் இனியவனே!
எமது உறவே நல்ல நண்பனே!
கலங்குகின்றோம்.
கண்ணீர் சிந்திக் கசிந்துருகுகின்றோம்.
*ஈஸ்வரா!*
உயிரற்ற உன் உடல் கண்டு
ஏன் எமக்கு உயிரென்று
கதறுகின்றோம்.
தீயிலே நடந்தாயே
தீண்டவில்லை - மரணம்
பஞ்சணையில் மட்டும்
என்னவானது?

அன்பான மனைவி
அழகான குழந்தைகள்
அம்மா, அக்கா, தங்கை, தம்பி
மச்சாள், மட்டுமல்ல... மட்டுமல்ல...
செய்தி கேட்டு
துடிக்கும் உள்ளங்கள்
எத்தனை... எத்தனை...

எம் உறவே!
நாம் இங்கு தவிக்கின்றோம்
எம்மைத் தேற்ற நீ
எழுந்தோடி வா!

உன் பாதை புதியது,
உன் தடமும் முதலது,
கிழக்கில்தான் சூரியன் உதிக்கின்றது...
ஒளியோ அகிலமெங்கும் தெறிக்கின்றது...
நீயும் அப்படித்தானே!

இனியவனே!
காந்தியம் கண்டாய்...
சித்தாந்தம் கொண்டாய்...
உழைத்தவனுக்கு கூலியும்
பசித்தவனுக்கு சோறும்...
எழுந்து வாருங்கள்...
படையில் சேருங்கள்...
ஏழ்மை ஒழியும்...
தேசியம் மலரும் - எனும்
உன் பாசறை முழக்கங்கள்
இன்னும் ஒலிக்கின்றது.

தமிழர் வரலாற்றில்
உனக்கும் இடமுண்டு.
எம்மினத்துக்காய்
பசித்திருந்தாய்,
கல்லிலும், காட்டிலும்
முள்ளிலும், சேற்றிலும்
தூங்கவும் நடக்கவும்...
உனக்கென்ன தலையெழுத்தா?
இல்லை...
எம்மினத்துக்காய்

நண்பனே!
உன்னை மறக்காது எம்மினம்
நீ மறைந்துவிடவில்லை
உன் தியாகங்களால்
என்றும் - நீ
வாழ்ந்து கொண்டிருப்பாய்.

**லுசேர்ன், பாரிஸ் நண்பர்கள்**

www.tamilarangam.net

# இறுதி வணக்கம்



தாய் நிலத்தில்
30.10.1958

புகலிடத்தில்
20.01.1999

## கந்தையா புவனேஸ்வரன்
## (ஈஸ்வரன்)

*இறுதி அஞ்சலி எதிர் வரும் 25.01.1999 திங்கட்கிழமை*
**பிற்பகல் 14.00 மணி தொடக்கம் 14.45 மணிவரை**
**St.Gallen Fridhof Feldli ல் நடைபெறும்.**
**Feldli str / 9000 St.Gallen**



www.tamilarangam.net

# இதய அஞ்சலி



**மலர்வு**
**30.10.58**

**உதிர்வு**
**20.01.99**

## கருப்பையா.ஈஸ்வரன்

மட்டுநகர் தந்த மண்ணின் மைந்தனே, ஈஸ்வரா !
மண்ணின் விடுதலைக்காய் நியாயவழி நின்றுழைத்தாய்
காந்திய தொண்டாற்றி தர்மப்பணி செய்தாய்
யாருக்கும் விலையாகா வீரத்தின் வித்தானாய்.

சுவிற்சலாந்தின் செங்காலன் மாநகரில் வாழ்ந்தநாளில்
இறயின்தாளர் தமிழ்மன்றுமூலம் கலைநிகழ்வுகள் தந்தவனே
நாடகம் தந்து நடுவராகநின்று இன்று நடுவழியில் சென்றதேனோ
பட்டிமன்றம் பேசி,எம்பாலகர், பாட,பேச நல்ல தமிழ்தந்தவனே
நீ வாழ்வாய், எம்கலையும் வாழுமென எண்ணியிருந்தோம்
கலங்காத நெஞ்சகனே, நாம்கலங்க
காலன் நோயுருவில் வந்தானோ !

உன்புனித ஆத்மா சாந்திபெற எமது இதய அஞ்சலிகள்

மனைவி,பிள்ளைகள், பெற்றோர், சகோதரர் உறவினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**இறயின்தாளர் தமிழ்மன்றம்**
**25-01-99**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
30-10-1958



ஆண்டவன் அடியில்
20-01-1999

ஆருயிர் நண்பனே ஈஸ்வரா !
ஆறாத்துயரில் எமமை ஆழ்த்திச் சென்றுவிட்டாய்.. .!

மாறாத்துயரில் மனம் நொந்து வாடுகிறோம்.
மாண்டசெய்தி பொய்யாகி மீண்டு வர மாட்டீரோ. .. ?

விரிவான பார்வை கொண்டவனே !
விமர்சனங்களுடன் எல்லாவற்றையும்
நோக்கும் பேராற்றல் கண்டுவியந்து நின்றோம்.
விரைந்து - ஒரு கொடியநோய் வந்து உன் உயிர்
குடிக்கும் என்று .. கனவிலும் நாம் எண்ணவில்லை.
கலைத்துறையில் கால்பதித்து, நாடகங்கள், கவிதைகள் என்று
எம் காலாசாரம் காப்பதிலும் உன் பங்கை கவனமாய் செலுத்திவந்தாய்.
நண்பராய் துணைநின்று நம்பிக்கை ஊற்றி வந்தாய். நம்பியிருந்தோம்,
நாலைந்து நாள் கழித்து -நீ மீண்டும் வந்து பணிதொடர்வாய் என்று.. .. !
நம்பியிருந்தோம் - ஆனால் - நீ மீளா ஊர் சென்று ஏய்த்து விட்டாய் எம்மை.. .
காணாத உன் கடைசி மகளைப் பற்றி, காணும் எங்களிகளிடம் கவலைகள் பகர்வாய்.
காலம் கனியட்டும் என்று உம் கவலைக்கு மருந்து சொன்னோம் - ஆனால் காலனவன்
ஏய்த்து விட்டான். கனவுகளை மட்டுமல்ல. உம் மனைவி மக்கள், உற்றார்,
உறவுகளோடு, எங்களையும் தான்.

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.
பிரிவால் வாடி நிற்கும் நண்பர்களின் கண்ணீர்க் காணிக்கை

பிரிந்து வாடும்
இறயின்தாளர் நண்பர்கள்.
25 - 01- 1999

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி

அன்னை
மடியில்
30 - 10 - 1958



ஆண்டவன்
அடியில்
20 - 01 - 1999

ஈஸ்வரா !

ஈழத்திலே மட்டக்களப்பு மண்ணிலே மலர்ந்து
அகதியாய் சுவிஸ் நாட்டில் தஞ்சமென்று கால்பதித்து
தனித்து வாழ்ந்தாலும் தமிழொடு நல் உறவு கொண்டு,
தாயகத்து நிகழ்வுகளை நினைவுபடுத்தும் பல கலை நிகழ்வுகளை
முன்னெடுத்து, கலாசார நிலை சொல்லி, கலைஞர் எனும் எம் தோட்டத்தில்
உம் சிந்தனை எனும் விதை தூவி இறயின்தாளர் மேடையிலும் பயிராக்கி
பலரின் சிந்தனைக்கு விருந்தாக்கினீர்.

தாடிக்குள் ஒளிந்திருக்கும் வெள்ளைப்புன்னகையும், உம் சொல்லும் செயலும்
நினைவில் மலருதையா. . . !
நோய் என்ற கொடுமையால் நீர் மௌனமாய் சில நாட்கள் இருந்தாலும்
மீண்டும் வந்திடுவீர , விட்ட கலைப்பணி தொடர்ந்திடுவீர என்றெல்லோ
நாமிருந்தோம்.
இறைவனே! நாம் கலங்கத்திருவுளமோ
தாரணா புனைப்பெயரில் நீர் நெறியாண்ட நாடகப்பிரதிகளுக்கு
மகாகவி பாரதியாரின் கவிச்சொற்களையே பெயராக வைத்து
சிந்தனையைத் தூண்டிவிட்டீர். தவறுகளை தக்க தருணத்தில்
விமர்சிக்க என்றும் நீர் தயங்கியதில்லை. அதனால் நாம் இன்னும்
உரம்பெற்றோம். நீர் கற்றுத்தந்த கலைவடிவங்களை கருத்தில்
கொண்ட நாம் இன்னும் கற்றுக்குட்டிகள் தான்.
இறைவன் கருணையோடு உம் கலைப்பணி காப்போம்.

மனைவி, பிள்ளைகள், பெற்றார், சகோதரர்கள்,
உற்றார் உறவினர், நண்பர்கள். அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

~ நாடகக் கலைஞர்கள்
25~01~1999

www.tamilarangam.net

# எங்கே நாம் தேடுவது? எப்படி மனம் ஆறுவது?



அன்னையின் மடியில்
30.10.1958

ஆண்டவன் மடியில்
20.01.1999

## அமரர் திரு.கந்தையா ஈஸ்வரன்

ஆர்ப்பரித்த அலைகடல் அசையாது நிற்கின்றது,
ஓடுகின்ற கருமுகில்கள் ஒருமித்தே சொரிகின்றன,
நீ இருந்த எம்மிதையம் உன் நினைவால் அழுகின்றது,
எங்கே நாம் தேடுவது? எப்படி மனம் ஆறுவது?

மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகர் மண்ணில்,
கோட்டைக்கல்லாறில் வந்துதித்தாய் இவ்வுலகில்,
உன்னையே இழந்திட்டாய் இச்சுவிஸ் நாட்டினிலே,
எங்கே நாம் தேடுவது? எப்படி மனம் ஆறுவது?

இனிய உன் வேணியோடு இளம் பிஞ்சுகள் இரண்டினையும்,
இடம்மாற்றி இருக்க வைத்து,இனிய வழி காட்டி விட்டு,
உன்னிடத்தை மாற்றி, நீ உயரச்சென்று விட்டாய்,
எங்கே நாம் தேடுவது? எப்படி மனம் ஆறுவது?

மாதங்கள் பல சென்றாலும் மாறமாட்டாய் எம்மைவிட்டு,
உம்மை நாம் தேடுகின்றோம் ஊமையாய் சென்று விட்டாய்,
நமக்கிங்கு என்ன வேலை, நீயில்லா இவ்வுலகில்,
எங்கே நாம் தேடுவது? எப்படி மனம் ஆறுவது?

எப்படியோ நீ இன்னும் எம்மோடு வாழ்கின்றாய்,
இப்படியே உன் நினைவில் எம்மிதையம் தேய்கின்றது,
அப்படியே என்றாலும் ஆற்றுவதற்கு யார் வருவார்,
விதிப்படியே என்றிடுவோம் வேறென்ன செப்புவது.

உன் நினைவோடு உருகும்
உறவுகள்
Rapperswil வாழ் நண்பர்கள்
Rosen Stadt விளையாட்டுக்கழகத்தினர்

www.tamilarangam.net

# இங்கு நாம்...
# எங்கு நீயோ?



மலர்வு:
30.10.1958

உதிர்வு:
20.01.1999

**க. புவனேஸ்வரன் (ஈஸ்வரத்தார்)**

அன்புத் தோழா
புவனேஸ்வரா!
ஈஸ்வரனை இழந்த
புவனம் போல
இங்கு நாம்
எங்கு நீயோ?

மட்டுநகர் தந்த
மாவீரனே..
கட்டுண்ட தமிழினத்தை
காக்க வந்த தீரனே..

காந்திய சேவையில்
மனச்சாந்திகண்ட தோழா..
அகதிகள் தேவையை
செய்து தந்த தொண்டா..

விடுதலைப் போரில்
நீ நல்ல வீதிசமைத்தாய் ...
ஆயிரமாயிரம்
தோழர்கள் நெஞ்சில்
நீ நல்ல நீதி விதைத்தாய்...

அடர்ந்த காடுகள் கொண்டு
மலை அடிவாரம் ஒன்றில்
நீ எமக்கு
அறிமுகப்படுத்தப்பட்டாய்
அங்கு நீ நல்ல
அறிவுரைகள் தந்து

புதிய பாதையை புரிய வைத்து
விடுதலை விளக்கை
எமது நெஞ்சிலும் ஏற்றி வைத்தாய்

தமிழீழ மக்களின் நலத்திற்காய்
வழி நடந்த தோழனே...
கொடிய அரசுக்கெதிரே
கொடி பிடித்த வீரனே...

சிறையில் நீ
சித்திரவதைப் பட்டும்
தமிழர் சரித்திரத்தை காக்க
நீ சமர் புரிந்தாய்
அதன் மூலம்
அரசபடைகளையே அதிரவைத்தாய்

ஒரு குடையின் கீழ்
கொடிபிடித்தால்
உண்டுவாழ்வோம்
இல்லையேல்
பல வழிகளில் சென்று
பாடம் கற்போம் - என்று
கற்றுத்தந்த தோழனே - ஈஸ்வரா...
மரணத்தின் பிடியில் நீ
கிரகணத்தின் இருளில் நாம்...

தோழா...
உனது நினைவுகளின் வெளிச்சமே
இனி எமக்கு நிரந்தரம்
அதிலே ஒரு நாள்
நாம் காண்போம் சுதந்திரம்.

**நண்பர்கள் - லண்டன்**
**25.01.1999**

www.tamilarangam.net

# ஈஸ்வரன்

மலையக மக்களின் துயர் துடைக்க, அவர்களின் வாழ்வுக்காக தொண்டாற்ற அமைக்கப்பட்ட „காந்தீயம்" எனும் சமூக மேம்பாட்டு அமைப்பின் ஆரம்பகால உறுப்பினராகவும் அதன் உருவாக்கத்தின் காரணகர்த்தாவாகவும் திகழ்ந்த திரு. ஈஸ்வரன் அவர்கள் சுவிஸ் செங்காலன் எனும் இடத்தில் 20.01.1999 அன்று காலமானார்.

ஈஸ்வரன் அவர்கள் ஈழத்தில் இருந்த காலங்களில் மலையக மக்களின் வளர்ச்சிக்காக இக் காந்தீய அமைப்பின் ஊடாக அம் மக்களின் வாழ்வின் மறுமலர்ச்சிக்காக, அம்மக்களின் சமூக பொருளாதார வாழ்வியல் மேம்பாட்டுக்காகக் காட்டிய ஆர்வமும், உழைப்பும் என்றும் மறக்கக் கூடிய ஒன்றல்ல. இவரின் அயராத உழைப்பின் சாட்சியமாக செட்டிக்குளம்-கல்லாறு காந்தீய குடியேற்றத் திட்டம் அக் காலங்களில் திகழ்ந்தது.

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் அயராது உழைத்தவர். 1986ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், இவர் சார்திருந்த அமைப்பினுள் ஏற்பட்ட முரண்பாடுகளின் நிமிர்த்தம் அதிருப்தி உற்று, இவ்வமைப்பை விட்டு வெளியேறினார். அதன் பின் மலையகத்தில் தலைமறைவு வாழ்வினை மேற்கொண்டு, அம்மக்களோடு மக்களாக வாழ்ந்தார். இக் காலங்களில் மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக, கொட்டகலை எனும் இடத்தில், கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து, அதன் ஆசிரியராகவும் கடமை புரிந்தார். அத்தோடு மலையகத்தில் உள்ள கலைஞர்களை ஒன்று கூட்டி, இதன் மூலம் கலை, கலாச்சார, நாடகத் துறைகளில் முற்போக்குப் பாதையை நோக்கிய நகர்வை அவர்களின்பால் ஊட்டினார். இவரின் நாடகம் ஒன்று இலங்கை அரசினதும், தொண்டமானினதும் கோபத்திற்குள்ளாகி, விமர்சனத்திற்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது.

இதன் பின் இலங்கை அரசின் தேடுதல் வேட்டை இவர் மீது திரும்பிற்று. 1989ம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு பலத்த சித்திரவதைகளின் பின் விடுதலை செய்யப்பட்டார். இதனால் இறுதியில் பலத்த சிரமங்களின் மத்தியில் சுவிஸ் நாட்டில் தஞ்சம் புகுந்தார். இங்கும், அவர் பணி அவரது மரணம் வரை தொடரவே செய்தது.

**நண்பர்கள்** **23.01.1999**

www.tamilarangam.net

# வீர வணக்கம்



தாய் நிலத்தில்
**30.10.1958**

புகலிடத்தில்
**20.01.1999**

## ஈஸ்வரன்

*விலைபோகா விடுதலைத் தீ ஒன்று*
*எம்மைவிட்டு சுடரணைந்து போனது*
*மீன்பாடித் தாலாட்டும்*
*மட்டுநகர் ஈன்றெடுத்த மைந்தனே*
*ஈழத்தாய் நாட்டை நீ நேசித்த நாள் தொடக்கம்*
*முற்போக்கினை முன்னிறுத்தி வாழ்ந்தவன் நீ அல்லவா*
*சாதி சம்பிரதாயங்களில் கட்டுண்டவனை*
*விடுவிப்பதற்காய் உன் வாழ்க்கையில்*
*பல கோணங்களில் சீராக எடுத்தியம்பினாய்*
*விடுதலையை விலை பேசியபோது*
*பட்டினி கிடந்தும் விலை போகாத*
*ஈழமண்ணின் காந்தியல்லவா நீ*
*எதிரியோடு கைகோர்த்த கயவர்க்கு*
*இப்படியும் விடுதலையை விரும்பலாம் என*
*உன் வாழ்வு எடுத்தியம்பும்*
*நான் நேசித்த விடுதலை கண்ணெதிரே*
*அரங்கேறுவதாய் கூறினீரே*
*ஈழ விடுதலை பிரசவிக்கு முன்*
*கண்ணயர்ந்து போனீரே ஈஸ்வரா*
*ஈழம் மலருகையில் உன் போன்ற*
*உத்தமரை நினைவு கூர்வோம்*
*ஈழத்தாயின் இறுதி வணக்கம்.*

*St. Gallen நண்பர்கள்*